# மீன்வளத்துறை

## மக்கள் சாசனம்

## 2013–2014

**மீன்வளத்துறை**
**மக்கள் சாசனம்**
**2013–2014**

| வ.எண். | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம். | 1 |
| 2. | தமிழ் நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம். | 1 |
| 3. | கடலில் மீன்பிடிப்பு தடை செய்யப்பட்ட காலங்களில் மீனவ குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்குதல். | 2 |
| 4. | மீன்பிடிப்பு குறைந்த பருவமழைக் காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்குதல். | 2 |
| 5. | மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம். | 2 |
| 6. | மீனவர் / மீனவ மகளிர் தனிநபர் குழு விபத்து காப்புறுதித் திட்டம் –1 (ஜனதா) (சுய விருப்பத் திட்டம்) | 3 |
| 7. | மீனவர் குடும்பத்திற்கு தனிநபர் குழு ஜனதா விபத்துக் காப்புறுதித் திட்டம்–2(சுய விருப்பத் திட்டம்) | 3 |
| 8. | பாரம்பரிய மீன்பிடிக்கலன்களை இயந்திரமயமாக்குதல் திட்டத்தின்கீழ் உட்பொருத்தும்/ வெளிப்பொருத்தும் இயந்திரம் வாங்கிட மானியம் வழங்கும் திட்டம். | 4 |
| 9. | மீன்பிடி விசைப்படகுகளில் பயன்படுத்தப்படும் அதிவேக எரியெண்ணெய்க்கான மத்திய கலால்வரித் தொகையினைத் திரும்ப அளித்தல். | 4 |
| 10. | மீனவர்களால் மீன்பிடிப்பிற்குப் பயன்படுத்தப்படும் அதிவேக எரியெண்ணெய்க்கு விற்பனைவரி விலக்களித்தல். | 4 |
| 11. | பிற நாடுகளில் சிறை வைக்கப்படும் மீனவரின் குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்குதல். | 5 |
| 12. | காணாமல்போகும் மீனவர் குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்கும் திட்டம். | 5 |
| 13. | இலங்கை கடற்படை தாக்குதலால் இறக்கும் / காயமடையும் மீனவரின்குடும்பத்திற்கு நிதி உதவி வழங்குதல். | 6 |

| | | |
|---|---|---|
| 14. | ஆழ்கடல் சூரை மீன்பிடிப்பிற்கு ஏற்றவாறு மீன்பிடி விசைப்படகுகளை மாற்றி அமைத்தல் / இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளை மாற்றியமைத்தல் மூலம் தரம் உயர்த்துதல் / புதியதாக மீன்பிடி படகு கட்டுதலுக்கு மானியம் வழங்குதல். | 6 |
| 15. | 10 மற்றும் + 2 வகுப்பு மீனவ மாணவ, மாணவியருக்கு பரிசுத் தொகை வழங்குதல். | 6 |
| 16. | மீனவர்களுக்கு கைரேகை மற்றும் புகைப்படத்துடன் கூடிய (Bio Metric) அடையாள அட்டை வழங்குதல். | 7 |
| 17. | இணையதளத்தின் வாயிலாக மீன்பிடிக் கலன்களை பதிவு செய்தல் மற்றும் மீன்பிடி உரிமம் வழங்குதல். | 7 |
| 18. | தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மண்ணெண்ணெயில் இயங்கும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டு படகுகளுக்கு விற்பனை வரி நீக்கப்பட்ட வணிக ரீதியிலான மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம். | 8 |
| 19. | மீனவ இளைஞர்கள் கடல்சார் கல்வி பயில உதவித்தொகை வழங்குதல். | 8 |
| 20. | மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் வழங்கப்படும் சலுகைகள் / உதவிகள் (மத்திய–மாநில அரசுத் திட்டம்) | 9 |
| 21. | உவர் நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை (மத்திய – மாநில அரசுத் திட்டம்) | 10 |
| 22. | தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம் | 11 |
| 23. | தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத் திட்டம் ( உள்நாட்டு மீன்வளம் மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு) | 12 |
| 24. | உள்நாட்டு மீன் பாசிக் குத்தகை மற்றும் மீன்பிடி உரிமம். | 14 |
| 25. | மீன்வளர்ப்பதற்கான நீர் மற்றும் மண் பகுப்பாய்வு செய்தல். | 14 |
| 26. | மீன்கள் மற்றும் இறால்களுக்கான நோய்களைக் கண்டறிந்து கட்டுப்படுத்துதல். | 14 |
| 27. | தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம். | 14 |
| 28. | தமிழ்நாடு மீனவர் நல வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள். | 16 |
| 29. | திட்டச் செயலாக்க அலுவலர்களின் முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் விவரம். | 18–28 |

# தமிழ்நாடு அரசு
# மீன்வளத்துறை
# மக்கள் சாசனம்
# 2013–2014

| வ. எண். | திட்டத்தின் பெயர் / உதவி பெறுவதற்குரிய முறைகள் / தகுதிகள் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 1 | **தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்** | |
| | அ) 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்டும், கடல் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினராகவும், முழுநேர கடல் மீன்பிடித் தொழில் செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.<br>ஆ) மீனவரின் குடும்ப உறுப்பினர் எவரும் மீன்பிடித் தொழிலைத்தவிர வேறு விதமான வருமானம் ஈட்டக் கூடிய எந்தத் தொழிலிலும் ஈடுபட்டிருத்தல் கூடாது.<br>இ) இயந்திரம் பொருத்திய மீன்பிடி விசைப்படகு / இயந்திரம் பொருத்திய கரையேற்றி வைக்கும் கலன்கள் ஆகியவற்றிற்கு சொந்தமுடையவராக இருத்தல் கூடாது.<br>ஈ) மீனவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவராக இருத்தல் வேண்டும்.<br>உ) உறுப்பினர் ஒருவர் மாதம் ஒன்றிற்கு ரூ. 70/– வீதம் 8 மாதங்களுக்கு ரூ.560/– மற்றும் 9–வது மாதத்தில் ரூ. 40/–ம் மொத்தம் ரூ. 600/– மட்டும் செலுத்த வேண்டும். மத்திய மற்றும் மாநில அரசின் பங்குத் தொகையான (50:50) ரூ.1,200/– உடன் சேர்த்து ரூ.1,800/–ஐ மீன்பிடிப்பு குறைவாக உள்ள 3 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்), மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம் ), விழுப்புரம் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம். |
| 2 | **தமிழ் நாடு கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்** | |
| | அ) 18 வயது முதல் 60 வயதுக்குட்பட்டும், கடல் மீனவ மகளிர் கூட்டுறவு சங்க உறுப்பினராகவும்,<br>ஆ) கடல் மீன்பிடித்தொழில்/ மீன்பிடித் தொழில் சார்புடையவராகவும் இருத்தல் வேண்டும்.<br>இ) பயனாளி ஒருவர், மாதம் ஒன்றிற்கு ரூ. 70/– வீதம் 8 மாதங்களுக்கு ரூ. 560/– மற்றும் 9வது மாதத்தில் ரூ. 40/– மட்டும் செலுத்த வேண்டும்.<br>ஈ) இத்திட்டத்தின் கீழ், மீனவ மகளிரின் பங்கான ரூ. 600/– உடன் மாநில அரசின் பங்கான ரூ.1200/–ஐ சேர்த்து மீன்பிடிப்பு குறைவாக உள்ள 3 மாதங்களுக்கு, கடல் மீனவ மகளிருக்கு நிவாரணமாக ரூ.1, 800/– வழங்கப்படுகிறது. | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்), மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம் ), விழுப்புரம் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம். |

| | | |
|---|---|---|
| **3** | **கடலில் மீன்பிடிப்பு தடை செய்யப்பட்ட காலங்களில் மீனவ குடும்பங்களுக்கு நிவாரண உதவித் தொகை வழங்குதல்** | |
| | கடலில் மீன் இனப்பெருக்க காலத்தைக் கருத்தில் கொண்டும், கடல் வளத்தினைப் பாதுகாக்கும் பொருட்டும், ஒரே சீரான மீன்பிடிப்பு தடை 2001 ஆம் ஆண்டு முதல், ஒவ்வொரு ஆண்டும் 45 நாட்களுக்கு பின்வருமாறு அமல்படுத்தப்பட்டு வருகிறது.<br>**கிழக்குக் கடற்கரை பகுதி :** ஏப்ரல் 15 முதல் மே 29 முடிய<br>**மேற்குக் கடற்கரை பகுதி :** ஜுன் 15 முதல் ஜுலை 29 முடிய<br>இக்காலக்கட்டத்தில், கடல் மீனவர் குடும்பம் ஒன்றிற்கு நிவாரணமாக ரூ. 2000/– வழங்கப்படுகிறது.<br>அ) கடல் மீனவ குடும்பத் தலைவர் / தலைவி குடும்ப அட்டை பெற்றுள்ளவராக இருக்க வேண்டும்.<br>ஆ) மீன்பிடி விசைப்படகு பணியாளராக இருப்பின் படகு உரிமையாளரிடமிருந்து சான்றிதழ் பெற வேண்டும். | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்), மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம் ), விழுப்புரம் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம். |
| **4** | **மீன்பிடிப்பு குறைந்த பருவமழைக் காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்குதல்.** | |
| | மீன்பிடிப்பு குறைந்த பருவமழை காலத்தில் மீனவ குடும்பம் ஒன்றுக்கு சிறப்பு நிவாரணமாக ரூ. 4,000/– வழங்கப்படுகிறது. | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்), மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம் ), விழுப்புரம் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம். |
| **5** | **மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்** | |
| | அ) மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். 18 முதல் 65 வயதிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.<br>ஆ) முழுநேர மீன்பிடித்தொழில் செய்பவராக இருத்தல் வேண்டும்.<br>இ) பயனாளி சந்தா தொகை ஏதும் செலுத்த தேவையில்லை.<br>ஈ) ஒரு மீனவருக்கான ஆண்டு சந்தாத்தொகை ரூ. 30/– (மத்திய மற்றும் மாநில அரசு ரூ.15/– சமமாக ஏற்று செலுத்துகிறது).<br>உ) உள்நாட்டு மீனவர் / மீனவ மகளிரும் இத்திட்டத்தில் பயனடையலாம்.<br>ஊ) இத்திட்டத்தின் கீழ் மீன்பிடிப்பு மேற்கொள்ளும்போதும் விபத்தினால் மரணமடையும் / முழு ஊனமடையும் / காணாமல் போகும் மீனவரின் குடும்பத்திற்கு நிவாரண தொகையாக ரூ.1,00,000/–ம், பகுதி ஊனமடையும் மீனவருக்கு நிவாரணத் தொகையாக ரூ. 50,000/–ம் வழங்கப்படுகிறது. | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்) / (உள்நாட்டு மீன்வளம்) / (நீர்வாழ் உயிரின வளர்ப்பு) / (விரிவாக்கம் மற்றும் பயிற்சி). |

| | | |
|---|---|---|
| **6** | **மீனவர் / மீனவ மகளிர் தனிநபர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம் –1 (ஜனதா) (சுயவிருப்பத் திட்டம்)** | |
| | அ) மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்,<br>ஆ) பயனாளியிடமிருந்து ஆண்டு சந்தா தொகை தலா ரூ.60/– வீதம் வசூல் செய்யப்படும்.<br>இ) சந்தா தொகை ஓரியன்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட். இராயபுரம் , சென்னை–13 என்ற பெயரில் வங்கி வரைவோலையாக செலுத்தப்படவேண்டும்.<br>ஈ) காப்புறுதி சந்தா தொகை, காப்புறுதி நிறுவனத்தை சென்றடைந்த தேதியிலிருந்து ஓராண்டுக்கு காப்பீடு உறுதி செய்யப்படும்.<br>உ) இத்திட்டத்தின் கீழ் மீனவர் / மீனவ மகளிர் விபத்தில் இறந்தாலோ / முழு ஊனமடைந்தாலோ / மீன்பிடிக்கும்போது காணாமல் போனாலோ ரூ. 1, 00,000/– பகுதி ஊனமடைந்தால் ரூ.50, 000/– நிவாரணமாக வழங்கப்படும்.<br>ஊ) தற்போதுள்ள இத்திட்டம் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட காப்புறுதி நிறுவனம் மூலம் 1.1.2011 முதல் 31.12.2013 வரை நடைமுறையில் இருக்கும். | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்) / (உள்நாட்டு மீன்வளம்) / (நீர்வாழ் உயிரின வளர்ப்பு) / (விரிவாக்கம் மற்றும் பயிற்சி). |
| **7** | **மீனவர் குடும்பத்திற்கு தனிநபர் குழு ஜனதா விபத்துக் காப்புறுதித் திட்டம்–2(சுய விருப்பத் திட்டம்)** | |
| | அ) மீனவர் / மீனவ மகளிர், மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.<br>ஆ) இத்திட்டத்தின் கீழ், உறுப்பினராக சேரும் மீனவர்/மீனவ மகளிர் குடும்பத்தினரிடமிருந்து ஆண்டு சந்தாத் தொகை ரூ.240/– வீதம் வசூல் செய்யப்படும்.<br>இ) சந்தா தொகை ஓரியன்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட். இராயபுரம், சென்னை–13 என்ற பெயரில் வங்கி வரைவோலையாக செலுத்தப்படவேண்டும்.<br>ஈ) காப்புறுதி சந்தா தொகை, காப்புறுதி நிறுவனத்தை சென்றடைந்த தேதியிலிருந்து ஓராண்டுக்கு காப்பீடு உறுதி செய்யப்படும்.<br>உ) இத்திட்டத்தின் கீழ், மீனவர் குடும்பத்திற்கு காப்பீடு செய்யப்படுகிறது. (குடும்பம் என்பது கணவர், மனைவி மற்றும் 2 குழந்தைகள்). இறப்பு / நிரந்தர முழு ஊனம் / மீன்பிடிக்கும் போது காணாமல் போனால் நிவாரணத் தொகை ரூ.1,00,000/– வழங்கப்படும். நிரந்தர பகுதி ஊனத்திற்கு ரூ.50,000/– நிவாரணத் தொகை வழங்கப்படும்.<br>ஊ) தற்போதுள்ள இத்திட்டம் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட காப்புறுதி நிறுவனம் மூலம் 1.1.2011 முதல் 31.12.2013 வரை நடைமுறையிலிருக்கும். | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்) / (உள்நாட்டு மீன்வளம்) / (நீர்வாழ் உயிரின வளர்ப்பு) / (விரிவாக்கம் மற்றும் பயிற்சி). |

| | | |
|---|---|---|
| 8 | **பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்கும் திட்டத்தின்கீழ் உட்பொருத்தும் /வெளிப்பொருத்தும் இயந்திரம் வாங்க மானியம் வழங்குதல்** | |
| | அ) மீனவர்கள் தங்கள் மீன்பிடிக்கலன்களை மீன்துறையில் பதிவு செய்து, செல்லத்தக்க மீன்பிடி உரிமம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>ஆ) வெளிப் பொருத்தும் இயந்திரத்தின் விலையில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30,000/– மானியமாக வழங்கப்படும்.<br>இ) மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும்.<br>ஈ) ஏற்கனவே இதே நோக்கத்திற்கு மானியம் பெற்றிருந்தால் மீண்டும் மானியம் பெற நான்கு ஆண்டுகள் இடைவெளி இருத்தல் வேண்டும். | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்), மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம் ), விழுப்புரம் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம். |
| 9 | **மீன்பிடி விசைப் படகுகளில் பயன்படுத்தப்படும் அதிவேக எரியெண்ணெய்க்கான மத்திய கலால்வரித் தொகையினை திரும்ப அளித்தல்** | |
| | அ) பயனாளி 20 மீட்டர் நீளத்திற்கு குறைவான மீன்பிடி படகின் உரிமையாளராக இருத்தல் வேண்டும்.<br>ஆ) படகினை மீன்துறையில் பத்தாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு முன் பதிவு செய்து மீன்பிடிப்பு உரிமம் பெற்றிருத்தல் வேண்டும்.<br>இ) மீன்பிடிப்பு மற்றும் டீசல் உபயோகம் பற்றிய விவரங்களை அதற்குரிய படகு இயக்கப் பதிவேட்டில் பராமரிக்கப்பட வேண்டும்<br>ஈ) மீன்துறை அங்கீகரித்துள்ள டீசல் விற்பனை நிலையங்களில் டீசல் பெற்று மீன்பிடித் தொழிலுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.<br>உ) வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள மீன்பிடி படகு உரிமையாளர்களுக்கு, மத்திய அரசின் கலால் வரி மானியம் லிட்டர் ஒன்றிற்கு ரூ. 3/– வீதம், ஒரு மாதத்திற்கு 500 லிட்டர் அதிவேக எரியெண்ணெய்க்கு மானியம் வழங்கப்படும். | 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்ட விதிகளின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர்கள் (கடல்வளம்) / (மீன்பிடித்துறைமுக மேலாண்மை பிரிவு) / (விரிவாக்கம் மற்றும் பயிற்சி). |
| 10. | **மீனவர்களால் மீன்பிடிப்பிற்குப் பயன்படுத்தப்படும் அதிவேக எரியெண்ணெய்க்கு விற்பனைவரி விலக்கு அளித்தல்** | |
| | கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுப்படுத்தப்படும் விசைப்படகிற்கு மீன்பிடித் தடைக்காலம் நீங்கலாக ஆண்டொன்றிற்கு 15,000 லிட்டர் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட டீசல் வழங்கப்படுகிறது. இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளுக்கு ஆண்டொன்றிற்கு 3600 லிட்டர் டீசலுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்படுகிறது.<br>அ) படகு தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983 ன் கீழ் பதிவு செய்யப்பட்டு மீன்பிடி உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். படகினை காப்புறுதி செய்திருக்க வேண்டும்.<br>ஆ) கடலோர மாவட்டங்களில் மீன்துறையால் அனுமதிக்கப்பட்ட தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகம் / | 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்ட விதிகளின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர்கள் (கடல்வளம்) / (மீன்பிடித்துறைமுக மேலாண்மை பிரிவு) / (விரிவாக்கம் மற்றும் பயிற்சி) சென்னை மற்றும் தூத்துக்குடி. |

| | | |
|---|---|---|
| | தமிழ்நாடு தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் மற்றும் மீன்துறையால் அனுமதிக்கப்பட்ட தனியார் விற்பனை நிலையங்களில் விற்பனைவரி விலக்கு அளிக்கப்பட்ட உயர்வேக எரியெண்ணெய் விநியோகிக்கப்படும்.<br>இ) மீன்பிடித் தொழிலுக்கு மட்டுமே டீசல் வழங்கப்படும்.<br>ஈ) அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் டீசல் விநியோக அட்டை வழங்கப்படும். | |
| **11** | **பிற நாடுகளில் சிறை வைக்கப்படும் மீனவரின் குடும்பத்திற்கு உதவித் தொகை வழங்குதல்** | |
| | மீன்பிடிப்பின் போது பிறநாட்டினரால் கைது செய்யப்படும் மீனவரின் குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு கைதான மீனவர்கள் வீடு திரும்பும் வரை அவர்களின் குடும்பத்திற்கு, நாளொன்றுக்கு ரூ.250/– வீதம் நிவாரணம் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் வழங்கப்படுகிறது. (கைது செய்யப்படும் நாள் மற்றும் திரும்பும் நாள் நீங்கலாக).<br><u>நிபந்தனைகள்</u><br>அ) இந்த தின உதவித் தொகை, கடலில் மீன்பிடித் தொழில் செய்யும்பொழுது அண்டை நாட்டு அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படும் நபர், மீனவர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.<br>ஆ) மீனவர் கைது செய்யப்பட்ட விவரம் அயல் நாட்டிலுள்ள இந்திய தூதரகத்தால் உறுதி செய்யப்பட வேண்டும்.<br>இ) கைது செய்யப்பட்ட மீனவர் சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்டிருக்கக் கூடாது.<br>ஈ) மேலும், இத்தின உதவித் தொகை, மீனவர்கள், மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினராக இல்லாத பட்சத்தில், அவர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினராக பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து, அம்மீனவர்களுக்கு, நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் பட்சத்தில் இத்தொகை வழங்கிட வேண்டும். | 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்ட விதிகளின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர்கள் (கடல்வளம்) / (மீன்பிடித்துறைமுக மேலாண்மை பிரிவு) / (விரிவாக்கம் மற்றும் பயிற்சி) சென்னை மற்றும் தூத்துக்குடி. மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம்) விழுப்புரம், மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம். |
| **12** | **காணாமல்போகும் மீனவர் குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்கும் திட்டம்** | |
| | காணாமல்போகும் மீனவர் குடும்பத்திற்கு நாளொன்றுக்கு ரூ. 250/– அல்லது மாதம் ஒன்றுக்கு ரூ. 7,500/– இரண்டு ஆண்டுகள் வரை அதாவது காப்புறுதி நிவாரண கருத்துரு அனுப்பும் வரை வழங்கப்படுகிறது.<br><u>நிபந்தனைகள்</u><br>1) பாதிக்கப்பட்ட மீனவர் உண்மையான மீனவராகவும், மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.<br>2) விண்ணப்பத்துடன் உள்ளூர் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, அதன்மீது உள்ளூர் மீன்துறை சார் ஆய்வாளரின் / மீன்துறை ஆய்வாளரின் மேலொப்பத்துடன் மீன்துறை உதவி இயக்குநருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.<br>3) அ) மீனவர் காணாமல் சென்ற நாளிலிருந்து 30 நாட்கள் அவருடைய கிராமத்தில்/ கிராமங்களில் | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்), மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம் ), விழுப்புரம் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம். |

| | | |
|---|---|---|
| | இல்லையெனவும்,<br>ஆ) மீனவர் எந்தவிதமான சட்டவிரோத செயலிலும் ஈடுபடவில்லையெனவும் உள்ளூர் கிராம நிர்வாகிகளிடம் உறுதிமொழிக் கடிதம் பெற வேண்டும்.<br>4) காணாமல் போன மீனவர் கண்டுபிடிக்கப்பட்டு, அவர் சட்டவிரோத செயலில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரியவந்தால், வழங்கப்பட்ட தின உதவித் தொகையினை அரசுக்கு திரும்ப செலுத்துவதாக சம்பந்தப்பட்ட மீனவரின் குடும்பத்தார்களிடமிருந்து உறுதிமொழிக் கடிதம் பெற வேண்டும். | |
| **13** | **இலங்கை கடற்படை தாக்குதலால் இறக்கும் மீனவரின் குடும்பத்திற்கு நிதி உதவி வழங்குதல்** | |
| | அ) இலங்கை கடற்படையினரால் துப்பாக்கிச்சூட்டில் இறக்க நேரிடும் மீனவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணத் தொகை ரூ.3.00 இலட்சம் வழங்கப்படுகிறது.<br>ஆ) இறந்த மீனவர், குடும்பத்தின் வருவாய் ஈட்டும் ஒரே நபராக இருப்பின் நிவாரணத் தொகை ரூ.5.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது.<br>இ) துப்பாக்கிச் சூட்டின் போது சிறுகாயம் அடையும் மீனவருக்கு ரூ.20,000/–மும், படுகாயம் அடையும் மீனவருக்கு ரூ.50,000/–மும் வழங்கப்படுகிறது. | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்) மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம் ), விழுப்புரம் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம். |
| **14** | **ஆழ்கடல் சூரை மீன்பிடிப்பிற்கு ஏற்றவாறு மீன்பிடி விசைப்படகுகளை மாற்றி அமைத்தல் / இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டு படகுகளை மாற்றியமைத்தல் மூலம் தரம் உயர்த்துதல் / புதிதாக கட்டுதலுக்கு மானியம் வழங்குதல்.** | |
| | துாரக்கடல் பகுதியில், மாற்று மீன்பிடிப்பினை மேற்கொள்ள ஏதுவாக, மீன்பிடி விசைப்படகுகளை சூரைமீன் பிடிப்பதற்கு ஏற்றவாறு மாற்றியமைக்க அல்லது புதிய படகு வாங்க, இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளை மேம்படுத்த / புதிய படகு வாங்கிட / கட்டிட படகு ஒன்றிற்கு 25 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வழங்கப்படுகிறது.<br>தற்பொழுது 50 விழுக்காடாக மானியம் உயர்த்தப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்), மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம் ), விழுப்புரம் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி), இராதாபுரம். |
| **15** | **10 மற்றும் + 2 வகுப்பு மீனவ மாணவ, மாணவியருக்கு பரிசுத் தொகை வழங்குதல்** | |
| | மீனவ மாணவ, மாணவியர்களின் படிப்பினை ஊக்குவிக்கும் பொருட்டு 10ம் வகுப்பு மற்றும் 12–ம் வகுப்புகளில் உயர் மதிப்பெண்களை பெறுபவர்களுக்கு ஊக்கத் தொகையும் பாராட்டுச் சான்றும் 2005-06 | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்) / |

| | | |
|---|---|---|
| | ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது . ஊக்கத் தொகை 2010 -2011 ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படுகிறது.<br>**+2 வகுப்பு மாணவ / மாணவியருக்கு:**<br>அ) மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மீனவ மாணவ/ மாணவிக்கு ரூ.10000/– ஊக்கத் தொகை வழங்கப்படும்.<br>ஆ) மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெற்ற ஒரு மீனவ மாணவ / மாணவிக்கு ரூ.6000/– ஊக்கத் தொகை வழங்கப்படும்.<br>**10 ம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு:**<br>அ) மாநில அளவில் முதல் மதிப்பெண் பெற்ற மீனவ மாணவ / மாணவிக்கு ரூ.6000/– ஊக்கத்தொகை வழங்கப்படும்.<br>ஆ) மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெற்ற மீனவ மாணவ / மாணவிக்கு ஊக்கத் தொகை ரூ.2000/– இரண்டாம் மதிப்பெண் பெற்ற மாணவ / மாணவிக்கு ரூ.1000/– மற்றும் மூன்றாம் மதிப்பெண் பெற்ற மாணவ /மாணவிக்கு ரூ.600/– வழங்கப்பட்டு வருகிறது. ஊக்கப்பரிசு பெற்ற அனைத்து மீனவ மாணவ / மாணவியருக்கும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது. | (உள்நாட்டு மீன்வளம்) / (நீர்வாழ் உயிரின வளர்ப்பு). |
| **16** | **மீனவர்களுக்கு கைரேகை மற்றும் புகைப்படத்துடன் கூடிய (Bio Metric) அடையாள அட்டை வழங்குதல்** | |
| | அ) கடலோரப் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு கடலோரக் கிராமங்களில் வசிக்கும் மீனவர்களுக்கு கைரேகை பதியப்பட்ட புகைப்படத்துடன் கூடிய அடையாளஅட்டைகள் வழங்கும் திட்டத்தினை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.<br>ஆ) இந்த அடையாள அட்டைகள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ள கடல் மீனவர்களுக்கு வழங்கப்படும். | **1983–**ம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்ட விதிகளின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட கடலோர மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர்கள் (கடல்வளம்) / (மீன்பிடி துறைமுக மேலாண்மை பிரிவு)/ (விரிவாக்கம் மற்றும் பயிற்சி) சென்னை, தூத்துக்குடி. |
| **17** | **இணையதளத்தின் வாயிலாக மீன்பிடிக் கலன்களை பதிவு செய்தல் மற்றும் மீன்பிடி உரிமம் வழங்குதல்** | |
| | அ) கடலோர பாதுகாப்பினை கருத்தில்கொண்டு மத்திய அரசு இணையதளத்தின் வாயிலாக மீன்பிடிக் கலன்களை பதிவு செய்யும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.<br>ஆ) அனைத்து மீன்பிடிக் கலன்களும் பதிவு செய்யப்பட வேண்டும். மீன்பிடிக் கலன்களை பதிவு செய்வதற்கு கீழ்க்கண்ட ஆவணங்களை அளிக்க வேண்டும்:-<br>i) உரிய விண்ணப் படிவம்<br>ii) மீன்பிடிக் கலன் உரிமையாளருடைய புகைப்படம் / மீன்பிடிக் கலனின் புகைப்படம்<br>iii) வங்கிக் கடன் பெற்றதற்கான ஆவணங்கள்<br>iv) மீன்பிடிப் படகுக்கூடு குறித்த ஆவணங்கள் | **1983–**ம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்ட விதிகளின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட கடலோர மாவட்ட |

| | | |
|---|---|---|
| | v) இயந்திரம் வாங்கியதற்கான ஆவணங்கள்<br>vi) உரிமையாளர் தொடர்புடைய குடும்ப அட்டை / வாக்காளர் அடையாளஅட்டை<br>vii) பதிவுக்கட்டணம் செலுத்தியதற்கான விவரங்கள் மற்றும் தொடர்புடைய பிற ஆவணங்கள்<br>viii) மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருப்பின் அதன் விபரம்.<br><br>மீன்பிடிக் கலன்கள் பதிவு மற்றும் மீன்பிடிப்பு உரிமம் பெறுவதற்கான கட்டணம்<br><br>மீன்பிடிக்கலன் — பதிவுக்கட்டணம் — மீன்பிடி உரிமக் கட்டணம்<br>விசைப்படகுகள் (20 மீ. நீளம் வரை) — ரூ.250 — ரூ.250<br>நாட்டுப்படகுகள்<br>(அ) வள்ளம் — ரூ.25 — ரூ.25<br>(ஆ) கட்டுமரம் — ரூ.10 — ரூ.10 | மீன்துறை உதவி இயக்குநர்கள் (கடல்வளம்) / (மீன்பிடி துறைமுக மேலாண்மை பிரிவு) / (விரிவாக்கம் மற்றும் பயிற்சி). |
| **18** | **தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மண்ணெண்ணெயில் இயங்கும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு விற்பனை வரி நீக்கப்பட்ட வணிகரீதியிலான மண்ணெண்ணெய் வழங்கும் திட்டம்** | |
| | தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள மண்ணெண்ணெயில் இயங்கும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகுகளுக்கு ஆண்டொன்றிற்கு 3000 லிட்டர் விற்பனை வரி நீக்கப்பட்ட வணிக ரீதியிலான மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.<br>அ) மண்ணெண்ணெயினால் இயங்கும் இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகாக இருக்க வேண்டும்.<br>ஆ) இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகு தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983–ன் படி பதிவு செய்ததாக இருக்க வேண்டும். மீன்பிடி உரிமம் பெற்றிருக்க வேண்டும்.<br>இ) படகு மீன்பிடிப்பிற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.<br>ஈ) படகு பழுதுநிலையில் இருக்கக்கூடாது.<br>உ) விற்பனைவரி நீக்கப்பட்ட மண்ணெண்ணெய் மீன்துறை ஆணையர் / இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமே பெறப்பட வேண்டும். | மீன்துறை உதவி இயக்குநர் (மீன்பிடித்துறைமுக மேலாண்மை பிரிவு) தூத்துக்குடி, மீன்துறை உதவி இயக்குநர், (மீன்பிடித் துறைமுக மேலாண்மை பிரிவு), சின்னமுட்டம், மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம் மற்றும் பயிற்சி) குளச்சல் மற்றும் இராதாபுரம். |
| **19** | **மீனவ இளைஞர்கள் கடல்சார் கல்வி பயில உதவித்தொகை வழங்குதல்** | |
| | அ) கடல்சார் கல்வி பயிலும் மீனவ இளைஞர்களுக்கு கீழ்க்கண்ட கடல்சார் கல்வி பயில உதவித்தொகை ரூ.50,000/– வழங்கப்படும்.<br>i) மாலுமியியல் தொடர்பான பட்டயப் படிப்பு<br>ii) கடல் பொறியியல் தொடர்பான பட்டயப்படிப்பு | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர். |

| | | |
|---|---|---|
| | iii) படகுதள உதவியாளர் (இளங்கலை மாலுமியியல் பட்டப்படிப்புக்கு முந்தைய ஓராண்டு கால படிப்பு)<br>iv) பட்டயப்படிப்பு பொறியாளருக்கான இரண்டு வருட கடல் பொறியாளர் பயிற்சி படிப்பு<br>v) இளங்கலை பொறியாளருக்கான ஓராண்டு கடல் பொறியாளர் பயிற்சி படிப்பு<br>vi) மூன்று வருட மாலுமியியல் இளங்கலை படிப்பு<br>ஆ) உதவித் தொகை இரண்டு கட்டமாக வழங்கப்படும். 50 சதவீதம் பட்டயப்படிப்பில் சேர்ந்த உடனும், மீதி 50 சதவீதம் தொகை படிப்பினை முடித்த பின்பும் வழங்கப்படும்.<br>இ) உதவித்தொகை பெறும் மாணவரின் பெற்றோர் / காப்பாளர், கடல் / உள்நாட்டு மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும். | |
| **20** | **மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் வழங்கப்படும் சலுகைகள் / உதவிகள் (மத்திய–மாநில அரசுத் திட்டம்)** | |
| | **அ) புதிய குளங்கள் / குட்டைகள் அமைத்தல்**<br>ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்பு குளம் அமைத்திட ரூ. 3.00 இலட்சத்தில் 20 விழுக்காடு அல்லது அதிகபட்ச மானியத் தொகையாக ரூ. 60,000/– வழங்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட / பழங்குடியினத்தவர்க்கு 25 விழுக்காடு (அல்லது ) அதிகபட்ச மானியமாக ரூ. 75000/– ஒரு ஹெக்டேருக்கு வழங்கப்படுகிறது.<br><br>**ஆ) குளங்கள்/ தொட்டிகளை சீரமைத்தல் / புதுப்பித்தல்**<br>ஒரு ஹெக்டேருக்கு ஆகும் செலவினத்தொகை ரூ. 75,000/– த்தில் 20 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.15,000/–மும் தாழ்த்தப்பட்ட / பழங்குடியினருக்கு 25 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.18,750/–ம் வழங்கப்படும்.<br><br>**இ) கெண்டை மீன்வளர்ப்பு இடுபொருள் செலவினம்**<br>ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்பிற்கு ஆகும் செலவினத்தொகை ரூ. 50,000/–த்தில் 20 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.10,000/– வரையிலும், தாழ்த்தப்பட்ட / பழங்குடியினருக்கு 25 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.12,500/– வரையிலும் வழங்கப்படுகிறது.<br><br>**ஈ) நன்னீர் இறால் / டிரவுட் மீன்வளர்ப்பு**<br>ஒரு ஹெக்டேர் மீன்வளர்ப்பிற்கு ஆகும் செலவினத்தொகையான ரூ.1.80 இலட்சத்தில் 20 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.36,000/–மும் தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினருக்கு 25 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ. 45,000/– வரையிலும் வழங்கப்படுகிறது.<br><br>**உ) நன்னீர் மீன் குஞ்சு பொரிப்பகம் அமைத்தல்** | சம்பந்தப்பட்டட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம்) / (நீர்வாழ் உயிரின வளர்ப்பு). |

| | | |
|---|---|---|
| | 10 மில்லியன் மீன் குஞ்சு உற்பத்தி திறன் உள்ள ஒரு ஹெக்டேர் பரப்பில் உள்ள பொரிப்பகத்திற்கு ஆகும் செலவினத் தொகை ரூ. 12 இலட்சத்தில் 10 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.20 இலட்சம் வரை வழங்கப்படும். மலைப்பிரதேசங்களில் அதே உற்பத்தித் திறன் கொண்ட பொரிப்பகத்தினை அமைக்க ஆகும் செலவினத்தொகையான ரூ.16.00 இலட்சத்தில், 10 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.60 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br><br>**ஊ) மீன் தீவனம் தயாரிக்கும் நிலையம் அமைத்தல்**<br><br>இத்திட்டத்தின் கீழ் ரூ. 7.50 இலட்சம் செலவில் நாள் ஒன்றுக்கு 1.20 குவின்டால் மீன் தீவனம் தயாரிக்கும் நிலையம் அமைக்க 20 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.50 இலட்சம் வரை தொழில் முனைவோர் பெறலாம்.<br><br>**எ) நன்னீர் இறால் / டிரவுட் மீன்குஞ்சு பொரிப்பகம் அமைத்தல்**<br><br>வருடத்திற்கு 5 முதல் 10 மில்லியன் இறால் / டிரவுட் மீன்குஞ்சு உற்பத்தி திறன் உடைய ஒரு பொரிப்பகம் அமைக்க ஆகும் செலவினத் தொகை ரூ.12.00 இலட்சத்தில் 20 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.2.40 இலட்சம்வரை தொழில் முனைவோருக்கு ஒருமுறை மட்டும் வழங்கப்படுகிறது.<br><br>**ஏ) அலங்கார மீன் குஞ்சு பொரிப்பகங்கள் உட்பட ஒருங்கிணைந்த மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்தல்**<br>வருடத்திற்கு 5 முதல் 10 மில்லியன் மீன்குஞ்சு உற்பத்தித் திறன் உள்ள பொரிப்பகம் அமைக்க ஆகும் தொகையான ரூ.15.00 இலட்சத்தில், 10 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.50 இலட்சம் அனைத்து தரப்பு மீன்வளர்ப்போருக்கும் வழங்கப்படுகிறது.<br>**தகுதிகள்**<br>i) பயனாளி சம்பந்தப்பட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் உறுப்பினராக சேர்ந்திருப்பது அவசியம்.<br>ii) விண்ணப்பத்தினை பெற்று நிரப்பி சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநரிடம் (உள்நாட்டு மீன்வளம்) / (நீர்வாழ் உயிரின வளர்ப்பு) சமர்ப்பிக்க வேண்டும்.<br>iii) முதலில் விண்ணப்பிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். | |
| **21** | **உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் வழங்கப்படும் சலுகைகள் / உதவிகள் (மத்திய மாநில அரசு திட்டம் )** | |
| | **இறால் பண்ணை பதிவு செய்தல்**<br>அ) கடலோரப் பகுதியில் இறால் வளர்ப்பினை மேற்கொள்ள முன்வரும் எந்த ஒரு தனிநபரும், கடல் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தில் பதிவுச் சான்று பெற வேண்டும். | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (நீர்வாழ் உயிரின வளர்ப்பு) பொன்னேரி/ சிதம்பரம் |

| | | |
|---|---|---|
| | ஆ) ஒரு ஹெக்டேர் நீர் பரப்பளவில் உவர்நீர் இறால் பண்ணை நிறுவுவதற்கும் / புதுப்பிப்பதற்கும் 25 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.60,000/— வரை வழங்கப்படும் .<br>இ) இரண்டு ஹெக்டேர் அல்லது அதற்கு குறைவாக பரப்பளவுள்ள சிறு இறால் வளர்ப்போர் மட்டும் பயனடையலாம்.<br>ஈ) உவர்நீர் மீன்வளர்ப்போர், இறால் பண்ணை பதிவிற்கான விண்ணப்பப் படிவங்களை சம்பந்தப்பட்ட (நீர்வாழ் உயிரின வளர்ப்பு) மீன்துறை உதவி இயக்குநரிடமிருந்து அல்லது கடல் நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, நீர்வாழ் உயிரின வளர்ப்பு, மீன்துறை உதவி இயக்குநருக்கு வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.<br>உ) இத்திட்டத்தின் மூலம், தனி நபர்கள் மட்டுமல்லாமல் சுய உதவிக் குழுக்கள் மற்றும் மீனவர் கூட்டுறவு சங்கங்களும் பயனடையலாம்.<br>ஊ) முதலில் விண்ணப்பிப்பவருக்கு மானியம் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும். | நாகப்பட்டினம்/ இராமநாதபுரம்/ தூத்துக்குடி. |
| **22** | **தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்** | |
| | **1) மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகளுக்கு இடுபொருள் செலவினத்தில் 50% மானியம்**<br>அ) தேவைப்படும் நிலப்பரப்பு – 2 ஹெக்டேர் வரை<br>ஆ) உற்பத்தித்திறன் – ஆண்டுக்கு ஒரு அறுவடையில் 1.20 இலட்சம் விரலிகள்<br>இ) ஒரு அலகிற்கான செலவின மதிப்பீடு – ஒரு ஹெக்டேருக்கு ரூ. 1.00 இலட்சம்<br>ஈ) மானியம் (50%) – ஒரு ஹெக்டேருக்கு ரூ. 0.50 இலட்சம்<br>**தகுதிகள்**<br>i) தற்சமயம் செயல்பாட்டிலுள்ள நிலத்தில் அமைக்கப்பட்ட மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணைகளுக்கு மட்டும் இத்திட்டம் பொருந்தும்.<br>ii) விண்ணப்பத்தினை பெற்று நிரப்பி சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநரிடம் (உள்நாட்டு மீன்வளம்/ நீர்வாழ் உயிரின வளர்ப்பு ) சமர்ப்பிக்க வேண்டும்.<br>iii) முதலில் விண்ணப்பிப்பவருக்கு மானியம் வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்படும். | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம்) / மீன்துறை உதவி இயக்குநர் (நீர்வாழ் உயிரின வளர்ப்பு) பொன்னேரி/ சிதம்பரம். |

| 23 | தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத் திட்டம் ( உள்நாட்டு மீன்வளம் மற்றும் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ) | |
|---|---|---|
| | **1. வெள்ளைக்கால் இறால் (*Litopenaeus vannamei*)** பண்ணைகளில் குறிப்பிட்ட நோய் தாக்கும் கிருமிகளற்ற இறால் வளர்ப்பு மேற்கொள்ள கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.<br><br>அ) ஏற்கனவேயுள்ள இறால் பண்ணைகளில் *Litopenaeus vannamei* இறால் வளர்ப்பு செய்வதற்கு தேவையான உயிரி பாதுகாப்பு (Bio security measures) தொடர்பான கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.<br><br>ஆ) தனியார் இறால் பண்ணைகளில் *Litopenaeus vannamei* இறால் வளர்ப்பு செய்வதற்கு கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு (Coastal Aquaculture Authority) ஆணையத்திடம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். (5.00 ஹெக்டேர் முதல் 25 .00 ஹெக்டேர் வரை நீர்பரப்புக் கொண்டவை – தகுதியானவை)<br><br>இ) ஒரு அலகிற்கு 25% (ரூ.3.75 இலட்சத்திற்கு மிகாமல்) 5 ஹெக்டேர் நீர்பரப்பளவுள்ள தனியார் இறால் பண்ணையில் 10% சுத்திகரிப்பு குளம் அமைந்துள்ள இறால் பண்ணை உரிமையாளர்களுக்கு மானியமாக (Back ended subsidy) வழங்கப்படும்.<br><br>ஈ) பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கு மானிய உதவியாக ஒரு அலகிற்கு 30% மானியம் (ரூ. 4.5 இலட்சத்திற்கு மிகாமல் ) வழங்கப்படும்.<br><br>**2. உள்நாட்டு மீன்வளர்ப்பிற்கு வழங்கப்படும் நிதியுதவி**<br>அ) தற்போதுள்ள மீன்பண்ணைகள் / மீன்வளர்ப்பு குளங்களை சீரமைத்து ரூ. 75,000/– செலவில் புதுப்பித்து / சீரமைக்க தீவிர மீன்வளர்ப்பு மேற்கொள்ள, ஒரு ஹெக்டேருக்கு 20 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக ரூ.15,000/– வழங்கப்படும். தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினருக்கு 25 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக ரூ.18,750/– என்ற விகிதத்தில் வழங்கப்படும்.<br><br>ஆ) புதிய மீன்வளர்ப்பு குளங்கள் மற்றும் மீன்பண்ணைகள் ரூ.3.00 இலட்சம் செலவில் அமைத்து, தீவிர மீன்வளர்ப்பு மேற்கொள்ள ஒரு ஹெக்டேருக்கு 20 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக ரூ.60,000/– வழங்கப்படும். தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினருக்கு 25 விழுக்காடு மானியம், அதிக பட்சமாக ரூ.75,000/– என்ற விகிதத்தில் வழங்கப்படும்.<br><br>இ) மீன் மற்றும் இறால் வளர்ப்பிற்கு முதலாமாண்டு இடுபொருள் செலவினத்தில் மானியம். | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (நீர்வாழ் உயிரின வளர்ப்பு).<br><br>மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம்) / (நீர்வாழ் உயிரின வளர்ப்பு). |

**3 . மீன்வளர்ப்பு**

i) உற்பத்தியை பெருக்கும் பொருட்டு நவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி விஞ்ஞானரீதியில் மீன் / இறால் வளர்ப்பு மேற்கொள்ளும் மீன்வளர்ப்போரை ஊக்குவிப்பதற்காக முதலாமாண்டு இடுபொருள் செலவினத்தில் நிதியுதவி வழங்கப்படும்.

ii) தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டம் மற்றும் தேசிய மீனவள மேம்பாட்டு வாரியம் மூலம் மீன் குளங்கள் அமைப்பதற்கு மற்றும் சீரமைப்பதற்காக நிதியுதவி பெறும் விவசாயிகளுக்கு முதலாமாண்டு இடுபொருள் செலவினத்தில் நிதியுதவி வழங்கப்படுகிறது.

iii) மீன்வளர்ப்பிற்கான முதலாமாண்டு இடுபொருள் செலவினம் ஒரு அலகிற்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ.50,000/– என மதிப்பிடப்பட்டுள்ளது. 20% மானியம் அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.10,000/– எல்லா மீன் வளர்ப்போருக்கும் வழங்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு ஒரு அலகிற்கு 25% மானியம் அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.12,500/– வழங்கப்படும்.

iv) 7-8 மில்லியன் நுண்மீன் குஞ்சு உற்பத்தி திறன் உடைய நிலையம் ரூ.12.00 இலட்சம் செலவில் அமைப்பதற்கு 20 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக ரூ. 2.40 இலட்சம் வழங்கப்படும்.

v) 2.5 ஏக்கர் பரப்பளவில் புதிய மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் நிலையம் அமைத்து, விரலிகள் வளர்த்து எடுக்க ஆகும் செலவினம் ரூ. 3.00 இலட்சத்தில் 20 விழுக்காடு மானியம் ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.60,000/– தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினருக்கு 25 விழுக்காடு மானியம், அதிகபட்சமாக ரூ.75,000/– வழங்கப்படும்.

**4. நன்னீர் இறால் வளர்ப்பு**

அ) ஒரு அலகிற்கு முதலாமாண்டு இடுபொருள் செலவினம் ஒரு ஹெக்டேருக்கு ரூ.1,80,000/– என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆ) 20 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு ரூ.36,000/– அனைத்து மீன்வளர்ப்போருக்கும் வழங்கப்படும்.

**தகுதிகள்**

i) பயனாளிக்கு சொந்த இடம் / குத்தகை காலம் 10 வருடமாக இருத்தல் வேண்டும்.

ii) விண்ணப்பத்தினை பெற்று நிரப்பி சம்பந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநரிடம் (உள்நாட்டு மீன்வளம்/ நீர்வாழ் உயிரின வளர்ப்பு ) சமர்ப்பிக்க வேண்டும்.

ii) முதலில் விண்ணப்பிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| **24** | **உள்நாட்டு மீன்பாசிக் குத்தகை மற்றும் மீன்பிடி உரிமம்** | |
| | அ) அரசுடமையாக்கப்பட்ட நீர்நிலைகளில், உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் மீன்பிடி உரிமம் பெறத் தகுதியுடையவர் ஆவார்கள்.<br>ஆ) இதர நீர்நிலைகளின் மீன்பாசிக் குத்தகை பெற பொது ஏலத்தில் உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள் கலந்து கொள்ளலாம்.<br>இ) துறை கட்டுப்பாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களின் மீன்பாசிக் குத்தகை பெற ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் அவ்வப்போது துறையால் வெளியிடப்படும். | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம்) / (நீர்வாழ் உயிரின வளர்ப்பு). |
| **25** | **மீன்வளர்ப்பதற்கான நீர் மற்றும் மண் பகுப்பாய்வு செய்தல்.** | |
| | மீன்வளர்ப்போர், குளங்கள்அமைக்க மண் மற்றும் தண்ணீர் பகுப்பாய்வு செய்வதற்கு மாதிரி ஒன்றிற்கு கட்டணமாக ரூ. 20/– செலுத்தி பரிந்துரைகளைப் பெறலாம். | மீன்துறை உதவி இயக்குநர் (ஆராய்ச்சி) சென்னை / தூத்துக்குடி. |
| **26** | **மீன்கள் மற்றும் இறால்களுக்கான நோய்களைக் கண்டறிந்து கட்டுப்படுத்துதல்.** | |
| | மீன்வளர்ப்போர், மீன் / இறால் நோய் தாக்குதல் மற்றும் தடுப்பு முறைகள் குறித்த பரிந்துரைகளை மீன்வளத்துறையின் இலவச சேவையை அணுகிப் பெறலாம். | மீன்துறை உதவி இயக்குநர் (ஆராய்ச்சி) சென்னை / தூத்துக்குடி மீன்துறை உதவி இயக்குநர், (உள்நாட்டுமீன்வளம்), பவானிசாகர் மீன்துறை உதவி இயக்குநர் (நீர்வாழ் உயிரின வளர்ப்பு), பொன்னேரி/ சிதம்பரம்/ நாகப்பட்டினம் / தூத்துக்குடி. |
| **27** | **தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் (IAMWARM)** | |
| | **1. பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பு**<br>**0.1** ஹெக்டேர் பரப்பளவுள்ள பண்ணை குட்டைகள் வேளாண்பொறியியல் துறை மூலம் ரூ. **50,000/–** மதிப்பீட்டில் **10**% தனிநபர் பங்கீடாக விவசாயியின் நிலத்தில் உருவாக்கப்பட்டு மீன்வளர்ப்பு மேற்கொள்வதற்காக வழங்கப்படுகிறது. ஒரு முறை உள்ளீட்டுச் செலவினம் ரூ.**15,000/–** (மீன்குஞ்சுகள் – ரூ. 3,000 மற்றும் உணவிற்காக ரூ12,000 /–வழங்கப்படும்.<br>**2. மீன் விதை வங்கிகள் அமைத்தல்**<br>அ) சிமெண்டிலான மீன்விதை வங்கி கட்டுமானம்<br>i) 600 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மீன்விதை வங்கி அமைக்க ரூ.17.50 இலட்சம் வழங்கப்படுகிறது.<br>ii) மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்ய உள்ளீட்டுச் செலவினமாக ஒரு ஆண்டிற்கு ரூ.60,000/– வீதம் (மீன்குஞ்சுகள், உணவு, மின்சார செலவு, வேலையாட்கள் சம்பளம்) இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (உள்நாட்டு மீன்வளம்) மற்றும் (நீர்வாழ் உயிரின வளர்ப்பு) |

ஆ) நில மீன்விதை வங்கி மொத்த செலவினத் தொகையான ரூ.3.00 இலட்சத்தில் பணி மேற்கொள்வதற்கு முதலீட்டுச் செலவினமாக ரூ.2.70 இலட்சம் (100% மானியமாக ) மற்றும் உள்ளீட்டுச் செலவினமாக ரூ.0.30 இலட்சம் (50% மானியமாக) வழங்கப்படும்.

**3. கூண்டுகளில் மீன் குஞ்சு வளர்த்தல்.**

i) கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பதற்கு தேவையான கூண்டுகள் ரூ.15,000/- 100% மானியத்திலும், உள்ளீடுகளான மீன்குஞ்சு மற்றும் தீவனம் ஆகியவை ரூ.10,000/- 50% மானியத்தில் மீன்வளர்ப்போருக்கு வழங்கப்படுகிறது.

ii) ஒரு அலகிற்கான செலவினம் ரூ. 25,000/– ஒருமுறை மானியம் வழங்கப்படுகிறது.

**4. மீன்பிடி சாதனங்கள் வழங்கும் திட்டம்**

உப வடிநிலப் பகுதிகளிலுள்ள குளங்களில் சிறந்த மீன்பிடிப்பினை மேற்கொள்வதற்கு மீனவ கூட்டுறவு சங்கங்களுக்கு பரிசல், செவுள்வலை, இழுவலை போன்ற மீன்பிடி உபகரணங்கள் 90% மானியத்தில் வழங்கப்படுகிறது.

கண்ணாடிநாரிழை பரிசல்கள்
செவுள்வலை – ரூ. 15,000
(அல்லது)
இழுவலை – ரூ. 20,000

**5. வண்ணமீன்கள் உற்பத்தி மற்றும் வளர்த்தெடுக்கும் நிலையம் நிறுவுதல்**

உபவடிநிலப் பகுதிகளில் மீன்வளர்ப்போர் பயனடைய 2,500 சதுர அடியிலான வண்ணமீன் வளர்க்கும் அலகுகள் ரூ.2.00 இலட்சம் செலவில் கட்டி 100% மானியத்தில் வழங்கப்படுகின்றன.

**6. மீன் விற்பனை நிலையம் ( அளவு : 3.6 மீ x 3.0 மீ x3.0 மீ)**

மீனவர் கூட்டுறவு சங்கங்கள் அல்லது சுய உதவி குழுக்களுக்கு ரூ.4.00 இலட்சம் செலவில் மீன்பதனிடும் வசதிகளுடன் கூடிய மீன்விற்பனை நிலையம் 100% மானியத்தில் வழங்கப்படுகிறது. இந்த மீன் விற்பனை நிலையமானது உறைபதன பெட்டி, மின்னணு எடை கருவி, PVC பெட்டிகள், உயிர்மீன் கொள்கலன்கள், உபகரணங்களுடன் கூடிய மின்மோட்டார், துருப்பிடிக்காத கழுவும் தொட்டிகள், கையுறைகள் மற்றும் ஈ பிடிக்கும் கருவிகள் ஆகியவற்றை பெற்றிருக்கும்.

**தகுதிகள்**

i) பயனாளி சம்மந்தப்பட்ட உபவடிநிலப்பகுதியில் வேளாண் விவசாயியாக இருத்தல் வேண்டும்.

ii) விண்ணப்பத்தினை பெற்று நிரப்பி சம்மந்தப்பட்ட மீன்துறை உதவி இயக்குநரிடம் (உள்நாட்டு மீன்வளம் / நீர்வாழ் உயிரின வளர்ப்பு) சமர்ப்பிக்க வேண்டும்.

iii) முதலில் விண்ணப்பிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

| 28 | தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள். | |
|---|---|---|
| | மீன்பிடிப்பு மற்றும் மீன்பிடித்தொழில் சார்ந்த தொழிலாளர்களுக்கு, கீழ்க்கண்ட நலத்திட்டங்கள் தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன : | சம்பந்தப்பட்ட மாவட்ட மீன்துறை உதவி இயக்குநர் (கடல்வளம்) / (உள்நாட்டு மீன்வளம்) |

<table>
<tr><th>வ. எண்</th><th colspan="2">நிவாரணம் அல்லது உதவி</th><th colspan="3">தொகை (ரூபாயில்)</th></tr>
<tr><td>1.</td><td colspan="2">விபத்து தீர்வழி (நிவாரணம்)<br>(அ) விபத்தினால் மரணம்<br>(ஆ) இரண்டு கைகள் இழப்பு<br>(இ) இரண்டு கால்கள் இழப்பு<br>(ஈ) ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு<br>(உ) இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு<br>(ஊ) ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு<br>(எ) மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு<br>கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு</td><td colspan="3"><br>1,00,000<br>1,00,000<br>1,00,000<br>1,00,000<br>1,00,000<br>50,000<br><br>20,000</td></tr>
<tr><td>2.</td><td colspan="2">மீன்பிடிக்கையில் இறத்தல் அல்லது அதற்குப் பின்பு உடனடியாக விபத்தின் காரணமாக அல்லாமல்</td><td colspan="3">20,000</td></tr>
<tr><td>3.</td><td colspan="2">மீன்பிடிக்கையில் காணாமற்போன மீனவர்</td><td colspan="3">1,00,000</td></tr>
<tr><td>4.</td><td colspan="2">இயற்கை மரணம்</td><td colspan="3">10,000</td></tr>
<tr><td>5.</td><td colspan="2">ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை</td><td colspan="3">2,500</td></tr>
<tr><td rowspan="6">6.</td><td rowspan="2">உறுப்பினர்களின் மகன் அல்லது மகள் கல்வி உதவித் தொகை</td><td colspan="2">விடுதியில் தங்காதோர்</td><td colspan="2">விடுதியில் தங்கிபடிப்பவர்கள்</td></tr>
<tr><td>மாணவர்</td><td>மாணவியர்</td><td>மாணவர்</td><td>மாணவியர்</td></tr>
<tr><td>a) பத்தாம் வகுப்பு தேர்ச்சி</td><td>1,250</td><td>1,500</td><td>——</td><td>——</td></tr>
<tr><td>b) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி</td><td>1,750</td><td>2,000</td><td>——</td><td>——</td></tr>
<tr><td>c) தொழிற்பயிற்சி (I.T.I) மற்றும் பல்தொழிற் நுட்ப பயிற்சி (Polytechnic) (ஆண்டு ஒன்றிற்கு)</td><td>1,250</td><td>1,750</td><td>1,450</td><td>1,950</td></tr>
<tr><td>d) இளங்கலை பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு)</td><td>1,750</td><td>2,250</td><td>2,000</td><td>2,500</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | e) முதுகலை பட்டப்படிப்பு (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 3,250 | 3,750 |
| | f) சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கல்விகள் இளங்கலை (ஆண்டு ஒன்றிற்கு) | 2,250 | 2,750 | 4,250 | 4,750 |
| | g) முதுகலை தொழிற் கல்விகள் (ஆண்டு ஒன்றிற்கு) | 4,250 | 4,750 | 6,250 | 6,750 |
| 7. | திருமண உதவி | | | ஆண் | பெண் |
| | அ) உறுப்பினரின் திருமண உதவி<br>ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம் | | | 3,000<br>3,000 | 5,000<br>5,000 |
| 8. | மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு உதவித் தொகை<br>i) மகப்பேறு (மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– வீதம் ஆறு மாதங்கள்)<br>ii) கருச்சிதைவு<br>iii) கருக்கலைப்பு | | | 6,000<br>3,000<br>3,000 | |
| 9. | முதியோர் ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு) | | | 400 | |

மீனவர் நலவாரியத்தில் உறுப்பினராவதற்கு 18 முதல் 65 வயத்திற்குட்பட்ட, மீன்பிடிப்பு மற்றும் மீன்பிடித்தொழில் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

# மீன்வளத்துறை

## 29.திட்டச்செயலாக்க அலுவலர்கள் மற்றும் அவர்களது தொலைபேசி குறித்த தகவல்கள்

| மண்டலம் | வரிசை எண். | மாவட்டம் | அலுவலகங்களின் பெயர் | தொலைபேசி எண் |
|---|---|---|---|---|
| | 1 | சென்னை | **தலைமை அலுவலகம்**<br>மீன்வளத்துறை இயக்குநர்,<br>நிர்வாக அலுவலக கட்டடங்கள்,<br>தேனாம்பேட்டை,<br>சென்னை 600 006. | 044– 24320199<br>044– 24320791<br>044–24321927<br>044–24336311 |
| **சென்னை** | 2 | சென்னை | மீன்துறை இணை இயக்குநர்,<br>(மண்டலம்),<br>75, சாந்தோம் நெடுஞ்சாலை,<br>ராஜா அண்ணாமலைபுரம்,<br>சென்னை–600 028. | 044–24938596 |
| | 3 | சென்னை | முதல்வர்,<br>மீன்துறை பணியாளர் பயிற்சி நிலையம்,<br>தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் கட்டிடம்,<br>2–வது தளம்<br>அசோக் நகர்<br>சென்னை–600 083. | 044–24748988 |
| | 4 | சென்னை | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(கடல்வளம்),<br>249, சூரியநாராயண செட்டி தெரு,<br>இராயபுரம்,<br>சென்னை–600 013. | 044–25951697 |

| | | | |
|---|---|---|---|
| 5 | சென்னை | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(மீன்பிடித் துறைமுக மேலாண்மை பிரிவு)<br>மீன்பிடித் துறைமுக அலுவலக வளாகம்,<br>இராயபுரம்,சென்னை–600013. | 044–25986080 |
| 6 | சென்னை | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(ஆராய்ச்சி),<br>167, ஈ.வெ.ரா.சாலை, கீழ்ப்பாக்கம்,<br>சென்னை– 600 010. | 044–28361296 |
| 7 | காஞ்சிபுரம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(கடல்வளம்),<br>காஞ்சிபுரம் (இருப்பு) நீலாங்கரை<br>2/601, கிழக்குக் கடற்கரை சாலை<br>நீலாங்கரை, சென்னை – 600 041 | 044–24492719 |
| 8 | திருவள்ளூர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(கடல்வளம்),<br>11, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,<br>பொன்னேரி–601204. | 044–27972457 |
| 9 | திருவள்ளூர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(நீர்வாழ் உயிரின வளர்ப்பு),<br>99, என்.ஜி.ஓ.நகர்,<br>திருவொற்றியூர் நெடுஞ்சாலை,<br>பொன்னேரி–601204. | 044–27971262 |
| 10 | வேலூார் | மீன்துறை உதவி இயக்குநர்<br>(உள்நாட்டு மீன்வளம்)<br>16, 5–வது மேற்கு குறுக்கு தெரு,<br>காந்தி நகர் மேற்கு, காட்பாடி,<br>வேலூார் – 632 006 | 0416–2240329 |

| | | | | |
|---|---|---|---|---|
| **கடலூர்** | **11** | கடலூர் | மீன்துறை துணை இயக்குநர்,<br>(மண்டலம்)<br>74, ரஞ்சனி பிரியா நகர்<br>வெளிச்செம்மண்டலம்<br>கடலூர் 607 001 | 04142-290170 |
| | 12 | கடலூர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(கடல்வளம்),<br>மீன்பிடித் துறைமுக வளாகம்,<br>கடலூர் முதுநகர் – 607003 | 04142–238170 |
| | 13 | கடலூர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(நீர்வாழ் உயிரின வளர்ப்பு),<br>215–ஏ, பூதகேணி பள்ளிப்படை,<br>சிதம்பரம் 608001 | 04144–231353 |
| | 14 | கடலூர் | மீன்வள பயிற்சி மற்றும் தகவல் மையம்,<br>ரேவு மெயின் ரோடு,<br>பரங்கிப்பேட்டை அஞ்சல்<br>சிதம்பரம் | 04144–231353 |
| | 15 | விழுப்புரம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(உள்நாட்டு மீன்வளம்),<br>1, விஸ்வலிங்க ஆசாரி தெரு,<br>விழுப்புரம் 605 602 | 04146–224329 |

| | | | | |
|---|---|---|---|---|
| நாகப்பட்டினம் | 16 | நாகப்பட்டினம் | மீன்துறை இணை இயக்குநர்,<br>(மண்டலம்),<br>சுதன் டவர், (2–ம் தளம்),<br>பொது அலுவலகச் சாலை,<br>வெளிப்பாளையம்,<br>நாகப்பட்டினம்–611001 | 04365–247721 |
| | 17 | நாகப்பட்டினம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(கடல்வளம்),<br>1/1795 செகண்டு லைன்<br>கடற்கரை சாலை<br>நாகப்பட்டினம்–611001 | 04365–240992 |
| | 18 | நாகப்பட்டினம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(நீர்வாழ் உயிரின வளர்ப்பு),<br>10/15 காளியம்மன் கோவில் தெரு,<br>வெளிப்பாளையம்,<br>நாகப்பட்டினம்–611001 | 04365–247117 |
| | 19 | நாகப்பட்டினம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(விரிவாக்கம் மற்றும் பயிற்சி),<br>உப்பளம் சாலை,<br>நாகப்பட்டினம்–611001 | ----- |
| | 20 | திருவாரூர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(உள்நாட்டு மீன்வளம்),<br>20/3, சிவம் நகர், ஏ.வி.என் காலனி<br>பனகல் சாலை<br>திருவாரூர். – 610 001 | 04366–224140 |
| | 21 | தஞ்சாவூர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(கடல்வளம்),<br>873/4, அறிஞர் அண்ணா சாலை<br>கீழவாசல்<br>தஞ்சாவூர்–613001 | 04362–235389 |

| | | | | |
|---|---|---|---|---|
| திருச்சி | 22 | திருச்சி | மீன்துறை துணை இயக்குநர்,<br>(மண்டலம்),<br>எண்.17/2, சமது பள்ளிக்கூடத் தெரு,<br>காஜா நகர்,<br>திருச்சி–620020 | 0431–2421174 |
| | 23 | திருச்சி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(உள்நாட்டு மீன்வளம்),<br>4, காயிதேமில்லத் தெரு,<br>காஜாநகர்,<br>மன்னார்புரம்,<br>திருச்சி – 620020 | 0431–2421173 |
| | 24 | புதுக்கோட்டை | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(கடல்வளம்),<br>22, லட்சுமிபுரம் முதல் தெரு,<br>புதுக்கோட்டை–622001 | 04322–220069 |
| | 25 | திண்டுக்கல் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(உள்நாட்டு மீன்வளம்),<br>12-A ஸ்பென்சர் காம்பவுண்டு,<br>சென்ட்ரல் பஸ் ஸ்டாண்டு அருகில்,<br>திண்டுக்கல்–624003 | 0451–2427148 |
| இராமநாதபுரம் | 26 | இராமநாதபுரம் | மீன்துறை துணை இயக்குநர்,<br>(மண்டலம்)<br>இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர்<br>அலுவலக வளாகம்<br>மாவட்ட கருவூலக் கட்டடம் (முதல் தளம்)<br>இராமநாதபுரம்–623503 | 04567-230402 |
| | 27 | மதுரை | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(உள்நாட்டு மீன்வளம்), | 0452–2347200 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சிம்மக்கல்,<br>மதுரை–625001 | |
| | 28 | சிவகங்கை | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(உள்நாட்டு மீன்வளம்),<br>4, காளிமுத்தான் தெரு,<br>சிவகங்கை –630 611 | 04575–240848 |
| | 29 | இராமநாதபுரம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(கடல்வளம்),<br>இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்<br>மாவட்ட கருவூலக் கட்டடம் (முதல் தளம்)<br>இராமநாதபுரம்–623503 | 04567–230355 |
| | 30 | இராமநாதபுரம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(நீர்வாழ் உயிரின வளர்ப்பு),<br>இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்<br>மாவட்ட கருவூலக் கட்டடம் (முதல் தளம்)<br>இராமநாதபுரம்–623501 | 04567–230402 |
| | 31 | இராமநாதபுரம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(விரிவாக்கம் மற்றும் பயிற்சி),<br>மண்டபம்–623517,<br>இராமநாதபுரம் மாவட்டம் | 04573–241066 |
| | 32 | இராமநாதபுரம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(கடல்வளம்),<br>1, வடக்கு ரத வீதி,<br>இராமேஸ்வரம்–623526 | 04573–221231 |
| | 33 | தேனி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(உள்நாட்டுமீன்வளம்),<br>வைகை அணை 625562<br>பெரியகுளம் வட்டம் | 04546–237472 |
| தூத்துக்குடி | 34 | தூத்துக்குடி | மீன்துறை இணை இயக்குநர்,<br>தூத்துக்குடி (மண்டலம்), | 0461–2320673 |

| | | | |
|---|---|---|---|
| | | வடக்கு கடற்கரை சாலை,<br>மீன்துறை வளாகம்,<br>திரேஸ்புரம்<br>தூத்துக்குடி–628001 | |
| 35 | விருதுநகர் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(உள்நாட்டு மீன்வளம்),<br>120, இராஜாமணி ஹால்,<br>அருப்புக்கோட்டை ரோடு,<br>விருதுநகர். 620001. | 04562–244707 |
| 36 | தூத்துக்குடி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(கடல்வளம்),<br>மீன்பிடித் துறைமுக வளாகம் ,<br>தெற்கு கடற்கரை சாலை,<br>தூத்துக்குடி–628001 | 0461–2320458 |
| 37 | தூத்துக்குடி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(மீன்பிடி துறைமுக மேலாண்மை பிரிவு),<br>மீன்பிடித் துறைமுக வளாகம் ,<br>தெற்கு கடற்கரை சாலை,<br>தூத்துக்குடி–628001 | 0461–2329458 |
| 38 | தூத்துக்குடி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(ஆராய்ச்சி),<br>வடக்குக் கடற்கரை சாலை,<br>மீன்துறை வளாகம், திரேஸ்புரம்<br>தூத்துக்குடி–628001 | 0461–2325458 |
| 39 | தூத்துக்குடி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(நீர்வாழ் உயிரின வளர்ப்பு),<br>166, வடக்குக் கடற்கரை சாலை,<br>மீன்துறை வளாகம், திரேஸ்புரம்<br>தூத்துக்குடி–628001 | 0461–2324288 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 40 | தூத்துக்குடி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(விரிவாக்கம் மற்றும் பயிற்சி),<br>வடக்குக் கடற்கரை சாலை, தூத்துக்குடி–628001 | 0461–2322490 |
| | 41 | திருநெல்வேலி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(உள்நாட்டு மீன்வளம்),<br>1, லட்சுமி நரசிங்கபுரம் தெரு,<br>பாளையங்கோட்டை<br>பஸ் ஸ்டாண்டு எதிரில்,<br>பாளையங்கோட்டை,<br>திருநெல்வேலி–627002 | 0462–2581488 |
| | 42 | திருநெல்வேலி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(நீர்வாழ் உயிரின வளர்ப்பு),<br>மணிமுத்தாறு,<br>அம்பாசமுத்திரம் தாலுகா ,<br>திருநெல்வேலி–627421 | 04634–251807 |
| | 43 | திருநெல்வேலி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(விரிவாக்கம் மற்றும் பயிற்சி),<br>பழைய தாலுகா அலுவலக கட்டிடம்,<br>ராதாபுரம்–627141 | 04637–254183 |
| கன்னியாகுமரி | 44 | கன்னியாகுமரி | மீன்துறை துணை இயக்குநர்,<br>(மண்டலம்),<br>7C,குறிஞ்சி தெரு<br>சற்குண வீதி,<br>இராமவர்மபுரம்<br>நாகர்கோயில்–629001 | 04652-220278 |
| | 45 | கன்னியாகுமரி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(கடல்வளம்),<br>டிஸ்டிலரி ரோடு<br>வடசேரி பஸ் ஸ்டாண்டு அருகில்,<br>நாகர்கோயில்–629001 | 04652–227460 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 46 | கன்னியாகுமரி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(நீர்வாழ் உயிரின வளர்ப்பு),<br>டிஸ்டிலரி ரோடு<br>வடசேரி பஸ் ஸ்டாண்டு அருகில்,<br>நாகர்கோயில்–629001 | 04652–227305 |
| | 47 | கன்னியாகுமரி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(விரிவாக்கம் மற்றும் பயிற்சி),<br>சைமன் காலனி, குளச்சல்–623521 | 04651–226235 |
| | 48 | கன்னியாகுமரி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(மீன்பிடித் துறைமுக மேலாண்மை பிரிவு),<br>சின்னமுட்டம்,<br>கன்னியாகுமரி–626702 | 04652-248278 |
| தர்மபுரி | 49 | தர்மபுரி | மீன்துறை துணை இயக்குநர்,<br>(மண்டலம்),<br>5/ 596, ஔவையார் தெரு<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்<br>எதிரில், தர்மபுரி – 636701 | 04342–233923 |
| | 50 | கிருஷ்ணகிரி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(உள்நாட்டு மீன்வளம்),<br>5/727பாரதி நகர்,<br>3 வது குறுக்கு சந்தைப்பேட்டை<br>கிருஷ்ணகிரி – 635001 | 04343–235745 |
| | 51 | சேலம் | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(உள்நாட்டு மீன்வளம்),<br>கொளத்தூர் சாலை<br>மேட்டூர் அணை–636401 | 04298–244045 |
| கோயம்புத்தூர் | 52 | கோயம்புத்தூர் | மீன்துறை துணை இயக்குநர்,<br>(மண்டலம்),<br>தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்<br>கழக கிளை கட்டிடங்கள்,<br>கவுண்டம்பாளையம் அஞ்சல்,<br>கோயம்புத்தூர்–614030 | 0422–2443451 |

| | | | |
|---|---|---|---|
| 53 | ஈரோடு | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(உள்நாட்டு மீன்வளம்),<br>எண் 4, எஸ்.வி. காம்ளக்ஸ்,<br>வீரப்பப்பாளையம்குறுக்குத்தெரு,<br>பெருந்துறை<br>சாலை, ஈரோடு – 638009 | 0424–2271912 |
| 54 | ஈரோடு | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(உள்நாட்டு மீன்வளம்),<br>பவானிசாகர் – 638451 | 04295–240646 |
| 55 | நீலகிரி | மீன்துறை உதவி இயக்குநர்,<br>(உள்நாட்டு மீன்வளம்), ஃபிஷ்டேல்,<br>பேருந்து நிலையம் அருகில் | 0423–2443946 |
| | | **மீனவர் நல வாரியம்** | |
| 56 | சென்னை | உறுப்பினர்–செயலர்,<br>தமிழ் நாடு மீனவர் நல வாரியம்,<br>கிழக்குக் கடற்கரை சாலை,<br>நீலாங்கரை,<br>சென்னை–600041 | 044–24490944 |
| | | **தமிழ் நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம்** | |
| 57 | சென்னை | செயலாட்சியர்,<br>தமிழ்நாடு வீட்டு வசதிவாரியக்கட்டடம்.<br>2– வது தளம், அசோக் நகர்,<br>சென்னை – 600 083 | 044– 24749024<br>044–24749023 |
| | | **மீன்வளத் துறை பொறியியல் பிரிவு** | |
| 58 | சென்னை | தலைமைப் பொறியாளர்,<br>மீன்வளத்துறை பொறியியல் பிரிவு<br>மீன்பிடித்துறைமுக திட்ட வட்டம்,<br>மீன்வளத்துறை இயக்குநர்<br>அலுவலகம், தேனாம்பேட்டை,<br>சென்னை – 600 006 | 044– 24331706 |

| | | | |
|---|---|---|---|
| 59 | சென்னை | **தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம்**<br>மேலாண்மை இயக்குநர்<br>தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம்<br>எண் 485, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் கட்டடம், நந்தனம்,<br>அண்ணாசாலை,<br>சென்னை – 600 035. | 044–24328787<br>044–24326451<br>044–24326471 |
| 60 | சென்னை | நிர்வாக மேலாளர்/மாவட்ட வருவாய் அலுவலர்<br>சுனாமி திட்ட செயலாக்க அலகு,<br>485, அண்ணாசாலை,<br>தமிழ் நாடு வீட்டு வசதிவாரிய கட்டடம்,<br>சென்னை 600 035 | 044-24338468 |
| 61 | நாகப்பட்டினம் | செயற்பொறியாளர்,<br>சுனாமி திட்ட செயலாக்க அலகு,<br>எண்.2, சங்கரவிநாயகர் கோயில் தெரு,<br>வெளிப்பாளையம்,<br>நாகப்பட்டினம் 611 001 | |
| 62 | தூத்துக்குடி | செயற்பொறியாளர்,<br>சுனாமி திட்ட செயலாக்க அலகு,<br>166, வடக்கு கடற்கரை சாலை,<br>தூத்துக்குடி 628 001 | |
| | | **மீன்வளத் தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி நிலையம்** | |
| 63 | சென்னை | முதன்மை நிர்வாக அலுவலர்<br>மீன்வளத் தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி நிலையம்<br>32, டாக்டர் நெடுஞ்செழியன் சாலை,<br>பெசன்ட் நகர்,<br>சென்னை 600 090 | 044- 24461199 |